செ.வெ.எண்: 11 நாள்: 04.04.2020

# பத்திரிக்கை செய்தி

## கால்நடைபராமரிப்புத்துறை

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கொரனா வைரஸ் நோய் தொற்று தமிழ்நாட்டில் தீவரமாகாமல் தடுக்க தமிழக அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஏப்ரல் 14-ம் தேதிவரை ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு பல நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்களின் நன்மை கருதி போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு மாநிலம் முழுவதும் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு மாவட்ட எல்லைகளும் மூடப்பட்டுள்ளன.

மேலும் பொதுமக்களுக்கு மிகவும் அத்தியவாசிய தேவைகளுக்கான பொருட்களின் உற்பத்தி மற்றும் நகர்வுகள் தடையின்றி நடைபெறவும் , கால்நடை , கோழி, மீன், முட்டை, இறைச்சி , கோழித்தீவனம். கால்நடை தீவன உற்பத்தக்கான மூலக்பொருட்கள் ஆகிவற்றின் நகர்வுகளுக்கும் விலக்கு அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் உணவின்றி சிரமப்படும் நாயினங்கள் மற்றும் கால்நடைகள் ஆகியவற்றிற்க்கு உணவு அளிக்கவும் உடல் பாதிக்கப்பட்டு சிகிச்சை தேவைப்படும் ஆதரவற்ற கால்நடைகள் மற்றும் பிராணிகள் நலம் போனுதல் குறித்து பொதுமக்கள் தங்களது தகவல்களை இதற்கொன ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டணமில்லா தொலைபேசி எண் 1800-425-5880, நடமாடும் அம்மா ஆம்பலன்ஸ் எண் 1962 ஆகியவற்றின் மூலமாகவும் anh.tn@nic.in என்ற மின்னஞ்சல் மூலமாகவும் , மற்றும் கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் கைபேசி எண் 9445001126, கரூர் கோட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் கைபேசி எண்.9443649038 மற்றும் குளித்தலை கோட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் கைபேசி எண்.9843187414 மூலமாகவும் தெரிவிக்கலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க. அன்பழகன் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.